**ALL UNIONS AND ASSOCIATIONS OF BSNL (AUAB)**

**NO: UA/2018/54** **DATED 13.12.2018**

## சுற்றறிக்கை

பெறுனர்
அனைத்து மாநில மற்றும் மாவட்ட செயலாளர்கள்,
AUAB உறுப்பு சங்கங்கள்.

## 2018, டிசம்பர் 26 முதல் 29 வரை AUAB சங்கங்களின் இணைந்த பொதுக்குழுக் கூட்டங்களை நடத்திடுக…

அன்பார்ந்த தோழர்களே,

03.12.2018 முதல் நடைபெறவிருந்த காலவரையற்ற வேலைநிறுத்தத்திற்கான சிறப்பான தயாரிப்பு பணிகளை செய்திட்ட உங்கள் அனைவருக்கும் அகில இந்திய AUAB சார்பாக முதலில் மனதார்ந்த வாழ்த்துக்களை உரித்தாக்குகிறோம். AUAB செய்த கடுமையான தயாரிப்பு பணிகளோடு, வரலாற்றில் இல்லாத அளவில், நமது கோரிக்கைகளுக்கு மீடியாக்கள் வழங்கிய ஆதரவு ஆகியவற்றின் பின்னணியில் தான் மத்திய தொலை தொடர்பு அமைச்சர் AUAB தலைவர்களை 03.12.2018 அன்று பேச்சு வார்த்தைக்கு அழைத்து நமது முக்கியமான கோரிக்கைகளில் சிலவற்றை தீர்வும் கண்டுள்ளார்.

மத்திய தொலை தொடர்பு அமைச்சருடன் 03.12.2018 அன்று நடைபெற்ற பேச்சு வார்த்தைகளில் ஏற்பட்டுள்ள முடிவுகள் தொடர்பாக ஊழியர்கள் மத்தியில் விளக்கும் விதமாக நாடு முழுவதும் **அனைத்து மாவட்டங்களிலும், 2018, டிசம்பர் 26 முதல் 29 வரை இணைந்த பொதுக்குழுக்களைக் கூட்ட வேண்டும்** என 11.12.2018 அன்று புது டெல்லியில் நடைபெற்ற AUAB கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது. அந்தக் கூட்டங்களில் ஊழியர்களிடையே விளக்குவதற்கு வசதியாக உடன்பாட்டின் அம்சங்களை விளக்கி AUAB, இந்த சுற்றறிக்கையை வெளியிடுகிறது.

03.12.2018 முதல் காலவரையற்ற வேலை நிறுத்தத்திற்கான அறிவிப்பை தொலை தொடர்பு துறை செயலாளருக்கும், BSNL CMDக்கும் 15.11.2018 அன்று வழங்கப்பட்டது. அதன் பின் ஒரு குறுகிய கால இடைவெளிக்குள் மாநில அளவிலான கூட்டங்கள் நடைபெற்று, நாடு தழுவிய அளவில் வேலைநிறுத்தத்திற்கான தயாரிப்புக்கள் மிகச் சிறப்பாக நடைபெற்றன. துவக்கத்தில் மத்திய அமைச்சரும், தொலை தொடர்பு துறையின் செயலாளரும் AUAB தலைவர்களை சந்திக்கும் மன நிலையில் இல்லை. ஆனால் வேலை நிறுத்தத்திற்கான தயாரிப்புகள் வேகமெடுத்தவுடன், அத்துடன் மீடியாக்களின் ஆதரவும் சேர்ந்த காரணத்தால், அரசாங்கத்திற்கு வியர்க்க தொடங்கியது. ஞாயிற்றுக்கிழமையாக இருந்த போதும் 02.12.2018 அன்று தொலை தொடர்பு துறையின் செயலாளர் திருமிகு அருணா சுந்தர்ராஜன், AUABஐ பேச்சு வார்த்தைக்கு அழைத்தார். DOT மற்றும் BSNLன் மூத்த அதிகாரிகளும் கலந்துக் கொண்ட அந்த பேச்சு வார்த்தை நான்கு மணி நேரம் நடைபெற்றதே, அரசாங்கம் இதில் எவ்வளவு அக்கறையுடன் இருந்தது என்பதை வெளிப்படுத்தியது. தொலை தொடர்பு துறையின் செயலாளர் இந்த கோரிக்கைகளின் மீது மிகவும் சாதகமாக அந்தக் கூட்டத்தில் நடந்துக் கொண்டார். அனைத்து கோரிக்கைகளையும் தீர்வு காணும் விதமாக அவற்றின் மீது கடந்த இரண்டு வாரங்களாக அரசு எடுத்து வரும் முயற்சிகளை தெளிவாக எடுத்துரைத்தார். மத்திய தொலை தொடர்பு அமைச்சர் 02.12.2018 இரவு 8 மணிக்கு டெல்லிக்கு வருவதாகவும்,

03.12.2018 அன்று காலை 10 மணிக்கு AUAB தலைவர்களை அவர் சந்திப்பதாகவும் அந்தக் கூட்டத்திலேயே தொலை தொடர்பு துறை செயலாளர் தெரிவித்தார். மத்திய தொலை தொடர்பு அமைச்சர் இந்த பிரச்சனைகளை தீர்வு காண்பதில் அக்கறையுடன் உள்ளதால் இந்த போராட்டத்தை ஒத்தி வைக்குமாறும் அவர் கேட்டுக் கொண்டார். மத்திய தொலை தொடர்பு துறை அமைச்சர் ராஜஸ்தான் மாநில தேர்தல் பணிகள் காரணமாக அன்று வரை டெல்லியில் இல்லை.

இந்த சமயத்தில் தான் வேலை நிறுத்தத்தை தொடர்வது தொடர்பாக AUAB தலைவர்கள் ஒரு முக்கியமான முடிவை எடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. 03.12.2018 அன்று 00.00 மணிகளில் இருந்து நமது காலவரையற்ற வேலை நிறுத்தம் துவங்க வேண்டும். அதே சமயம் 03.12.2018 அன்று காலை 10.00 மணிக்கு மத்திய அமைச்சர் நம்மை சந்திக்க அழைத்திருக்கிறார். எனவே முதலில் எடுத்த முடிவின் படி கால வரையற்ற வேலை நிறுத்ததிற்கு செல்வதா வேண்டாமா என்கிற ஒரு முக்கியமான முடிவை நாம் எடுக்க வேண்டி இருந்தது.

03.12.2018 அன்று காலை 10.00 மணிக்கு மத்திய தொலை தொடர்பு அமைச்சர் நம்மை பேச்சு வார்த்தைக்கு அழைத்துள்ள நிலையில், அன்றைய தினம் காலை 00.00 மணியில் இருந்து வேலை நிறுத்தத்திற்கு செல்வது அறிவுடைமை ஆகாது என்ற ஏகோபித்த முடிவை 02.12.2018 அன்று மாலை நடைபெற்ற கூட்டத்தின் நீண்ட விவாதத்திற்கு பின் AUAB எடுத்தது. AUABக்கும் மத்திய தொலை தொடர்பு அமைச்சருக்கும் இடையே நடைபெற உள்ள பேச்சு வார்த்தை ஒரு சுமுகமான சூழ்நிலையில் நடைபெறுவதற்காக இந்த வேலை நிறுத்தத்தை ஒரு சில நாட்கள் தள்ளி வைக்க வேண்டும் என AUAB உறுதியாக கருதியது. இதன் காரணமாகத்தான் துவக்கத்தில் ஒரு வார காலத்திற்கு நமது காலவரையற்ற வேலை நிறுத்தம் தள்ளி வைக்கப்பட்டது.

அடுத்த நாளே மத்திய அமைச்சர் AUAB தலைவர்களை சந்திக்க இருந்த நேரத்தில், ஒரு வார காலத்திற்கு ஏன் வேலை நிறுத்தம் தள்ளி வைக்கப்பட்டது என ஒரு சில நண்பர்கள் கேள்வி எழுப்பலாம். நம்முடைய கோரிக்கைகளை வென்றடைய போராட்டங்களும் ஒரு பகுதி என்பதை நாம் தெளிவாக ஏற்றுக் கொள்கிறோம். பேச்சு வார்த்தை என்பது மற்றொரு முக்கியமான பகுதி.. நமது சக்தியான போராட்டங்கள் தான் அரசாங்கம்/நிர்வாகத்தை நம்மிடம் பேச்சு வார்த்தை நடத்துவதற்கு தேவையான நெருக்கடியை தரும். நெருக்கடி உருவாக்கப்பட்ட பின், பிரச்சனைகளின் தீர்விற்கு பேச்சு வார்த்தை முக்கிய பங்காற்றும்.

நாடு தழுவிய அளவிலே நாம் நடத்திய தயாரிப்பு பணிகள், மத்திய அரசை பேச்சு வார்த்தைக்கு வரவைப்பதற்கான நெருக்கடியை அரசுக்கு கொடுத்தது. அவர்கள் பேச்சு வார்த்தைக்கு வரும் போது நாமும் பேச்சு வார்த்தைக்கு செல்ல வேண்டும். மத்திய அமைச்சர் பேச்சு வார்த்தைக்கு அழைத்தாலும், நாம் ஏற்கனவே எடுத்த முடிவின் அடிப்படையில் நாங்கள் வேலை நிறுத்தத்திற்கு செல்வோம் என நாம் கூற முடியாது.

**03.12.2018 முதல் 3 அல்லது 4 நாட்கள் வேலை நிறுத்தம் செய்த பின்னரும் இந்த பிரச்சனைகளின் தீர்விற்கு மத்திய அமைச்சரிடம் தான் பேச வேண்டும். ஏனெனில் நமது 3வது ஊதிய மாற்ற பிரச்சனையில் மத்திய அமைச்சரவையின் ஒப்புதலை பெறுவதற்காக**

**அவர்தான் கொண்டு செல்ல வேண்டும். எனவே மத்திய அமைச்சருடன் 03.12.2018 அன்று பேச்சு வார்த்தை சுமூகமான சூழலில் நடைபெறுவதை உறுதி செய்யும் வகையில் காலவரையற்ற வேலை நிறுத்தத்தை சிறிது நாட்கள் தள்ளி வைக்க வேண்டும் என AUAB ஏகோபித்து முடிவு செய்தது.**

மேற்கண்ட புரிதலின் அடிப்படையில் காலவரையற்ற வேலைநிறுத்தத்தை ஒரு வார காலத்திற்கு தள்ளி வைத்துவிட்டு 03.12.2018 அன்று மத்திய தொலை தொடர்பு அமைச்சருடன் பேச்சு வார்த்தைக்கு AUAB சென்றது. இந்த பேச்சு வார்த்தையில், மத்திய தொலை தொடர்பு அமைச்சருடன், தொலை தொடர்பு துறையின் அனைத்து உயர் அதிகாரிகளும் பங்கேற்றனர். BSNLன் CMD மற்றும் DIRECTOR(HR) ஆகியோரும் உடன் இருந்தனர். நமது அனைத்து கோரிக்கைகளின் மீதும் நல்லதொரு விவாதம் நடைபெற்றது. BSNLக்கு 4G அலைக்கற்றை வழங்குவது, வாங்கும் ஊதியத்தின் அடிப்படையில் ஓய்வூதிய பங்களிப்பு வழங்குவது மற்றும் BSNL ஓய்வூதியர்களின் ஓய்வூதிய மாற்றம் ஆகியவற்றில் கீழ்கண்டவாறு உடன்பாடு ஏற்பட்டது:-

1. **BSNLக்கு 4G அலைக்கற்றை வழங்குவது**:- நமது காலவரையற்ற வேலை நிறுத்தத்திற்கான அறிவிப்பு கொடுத்த உடனேயே, BSNLக்கு 4G அலைக்கற்றை வழங்குவது தொடர்பான அமைச்சரவைக் குறிப்பை DoT தயாரித்து, அதனை அமைச்சரகங்களுக்கு இடையேயான ஆலோசனைக்கு அனுப்பி வைத்துள்ளது. இந்த அமைச்சரகங்களுக்கு இடையேயான ஆலோசனையை விரைவில் முடிக்க தொலை தொடர்பு துறையின் கூடுதல் செயலாளரை பணித்துள்ளதாக மத்திய தொலை தொடர்பு அமைச்சர் தெரிவித்தார். மேலும், இந்த பணி நிறைவு பெற்றவுடன் அடுத்த அமைச்சரவைக் கூட்டத்திலேயே ஒப்புதலை பெறுவதற்காக எடுத்து செல்வதாக அமைச்சர் உறுதி அளித்தார்.
2. **வாங்கும் ஊதியத்தின் அடிப்படையில் ஓய்வூதிய பங்களிப்பு:-** வாங்கும் ஊதியத்தின் அடிப்படையில் ஓய்வூதிய பங்களிப்பு பிரச்சனையில், தொலை தொடர்பு துறை சாதகமான பரிந்துரையுடன் நிதி அமைச்சகத்திற்கு அதன் ஒப்புதலை பெறுவதற்காக கடிதம் எழுதியுள்ளதாகவும் அது நிதி அமைச்சகத்திற்கு சென்று விட்டதாகவும் மத்திய தொலை தொடர்பு அமைச்சர் தெரிவித்தார். நிதி அமைச்சகத்திடம் இருந்து சாதகமான பதிலை எதிர்பார்த்திருப்பதாகவும், அது வந்தவுடன் இந்த பிரச்சனையும் தீர்வு காணப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.
3. **ஓய்வூதிய மற்றம்:-** பணியில் இருக்கும் ஊழியர்களின் ஊதிய மாற்றத்திலிருந்து BSNL ஓய்வூதியர்களின் ஓய்வூதிய மாற்றம் பிரிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை தொலை தொடர்பு துறை ஏற்றுக் கொண்டதாக தெரிவிக்கப்பட்டது. BSNL ஓய்வூதியர்களின் ஓய்வூதிய மாற்றம், ஊதிய மாற்றத்தோடோ அல்லது BSNLன் வழங்கும் சக்தியோடோ தொடர்பில்லை என்ற AUABயின் நிலைபாட்டை இறுதியாக தொலை தொடர்பு துறை ஏற்றுக் கொண்டது. இது மிக மிக முக்கியமான முன்னேற்றம். இது நமது 15 சதவிகித ஊதிய நிர்ணய பலனுடன் கூடிய ஊதிய மாற்ற கோரிக்கைக்கு வலுவூட்டும்.

**15.11.2018 அன்று AUAB காலவரையற்ற வேலை நிறுத்தத்திற்கான அறிவிப்பை கொடுத்த உடனேயே இந்த பிரச்சனைகளில் உண்மையான அக்கறையுடன் தொலை தொடர்பு துறை**

**முயற்சி எடுத்தது என்பது உண்மை. இவை அனைத்தும் BSNLன் பொருளாதார புத்தாக்கத்திற்கு மிகப்பெரிய சாதகமான அம்சங்கள். இந்த வெற்றிகளை நாம் சாதாரணமாக குறைத்து மதிப்பிட்டு விடக்கூடாது. நாம் பெற்றுள்ள இந்த வெற்றிகளை ஒருங்கிணைப்பதும் மிக மிக முக்கியமானது. அதாவது BSNLக்கு 4G அலைக்கற்றைக்கான அமைச்சரவை ஒப்புதலை பெறுவதும், வாங்கும் ஊதியத்தின் அடிப்படையில் ஓய்வூதிய பங்களிப்பிற்கு நிதி அமைச்சகத்தின் ஒப்புதலை பெறுவதும் மிக மிக அத்யாவசியமானது. இந்த கோரிக்கைகள் அனைத்தும் தொலை தொடர்பு துறையால் வடிவமைக்கப்பட்டு இதர அமைச்சகங்களின் ஒப்புதலுக்காக அனுப்பப் பட்டுள்ளது. இவற்றை இறுதி செய்வதில் தொலை தொடர்பு துறை செயலாளர் மற்றும் மத்திய அமைச்சரின் பங்கு மிக மிக முக்கியமானது.**

அதே போல, மத்திய அமைச்சர் முதன் முறையாக BSNL ஓய்வூதியர்களின் ஓய்வூதிய மாற்றத்தை பணியில் உள்ள ஊழியர்களின் ஊதிய மாற்றத்திலிருந்து பிரித்து பார்க்க ஒப்புக் கொண்டுள்ளார்.

4. **3வது ஊதிய மாற்றம்**:- 3வது ஊதிய மாற்றம் தொடர்பாக இறுதியான உடன்பாடு எதுவும் எட்டப்படவில்லை. ஆனால் அதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் உள்ளது. BSNL ஊழியர்களுக்கு ஊதிய மாற்றம் கிடையாது என்கிற எதிர்மறை நிலையினைத் தான் இதுவரை தொலை தொடர்பு துறை எடுத்து வந்தது. எனினும், காலவரையற்ற வேலை நிறுத்தத்திற்கான கடுமையான தயாரிப்பு பணிகள் அவர்களின் நிலையை மாற்ற வைத்துள்ளது. 03.12.2018 அன்று நடைபெற்ற பேச்சு வார்த்தையில், 3வது ஊதிய மாற்றத்தை பரிசீலிப்பதாகவும், ஆனால் 15% ஊதிய நிர்ணய பலனைத்தான் தர முடியாது என்றும் மத்திய தொலை தொடர்பு அமைச்சரும், தொலை தொடர்பு துறை அதிகாரிகளும் தெரிவித்தனர். மத்திய தொலை தொடர்பு அமைச்சர் மற்றும் தொலை தொடர்பு துறையின் செயலாளர் ஆகியோரின் பார்வையும் வாதங்களும் பின் வருமாறு:-
   - 15 சதவிகித ஊதிய நிர்ணய பலனுடன் 3வது ஊதிய மாற்றம் தரப்பட்டால் BSNLஆல் ஊதியம் வழங்க இயலாது.
   - 3வது ஊதிய மாற்றத்தினால் ஏற்படும் செலவினங்களை சந்திக்க BSNL கொடுத்துள்ள முன்மொழிவுகளில் பெரும்பாலனவை 4G அலைக்கற்றை ஒதுக்குவதற்கு முன்னரே, அந்த சேவையினால் வரும் வருமானங்களையே காட்டியிருப்பதை அமைச்சரவை ஏற்றுக் கொள்ளாது.
   - 4G அலைக்கற்றை மற்றும் 3வது ஊதிய மாற்றம் என்கிற இரண்டு பிரச்சனையையும் ஒரே சமயத்தில் அமைச்சரவைக்கு கொண்டு சென்றால் இரண்டும் நிராகரிக்கப்படலாம்.
   - 3வது ஊதியக் குழு என்கிற முன்மொழிவை ஏற்றுக் கொள்ளச் செய்வதற்கு கூடுதல் வருமான வாய்ப்புகளை கண்டு பிடிக்கப்பட வேண்டும்.
   - இதற்கிடையே இறுதி முடிவு எடுப்பதற்கு ஊழியர்களுக்கான ஊதிய மாற்ற பேச்சு வார்த்தை முடிவடைய வேண்டும். அதற்கு பின் ஒப்புதலை பெறுவதற்கு வசதியாக இருக்கும்.

5. **2வது ஊதிய மாற்றத்தில் விடுபட்ட பிரச்சனைகள்:-** 30.11.2018 அன்று நடைபெற்ற பேச்சு வார்த்தையில், நேரடி நியமன ஊழியர்களுக்கு ஓய்வூதிய பங்கீட்டு தொகையை மார்ச்,

2019 முதல் 3 சதவிகிதத்தை உயர்த்துவதற்கும், அடுத்த நிதியாண்டில் மேலும் நான்கு சதவிகிதத்தை உயர்த்தவும் BSNL CMD ஏற்றுக் கொண்டது மிகப்பெரிய முன்னேற்றமாகும்.

**பல்வேறு கோரிக்கைகளின் முன்னேற்றங்களை கவனிப்பதற்காக, DoTயில் ஒரு ஏற்பாட்டை(INSTITUTIONAL MECHANISM) செய்ய வேண்டும் என மத்திய தொலை தொடர்பு அமைச்சரும், தொலை தொடர்பு துறை செயலாளரும் ஏற்றுக் கொண்டது என்பது அவர்களின் மாறிய மன நிலையை எடுத்துக் காட்டுகிறது. இதன் மூலம் பிரச்சனைகளின் தீர்வில் உள்ள முன்னேற்றங்கள் தொடர்பாக தொலை தொடர்பு துறை அதிகாரிகளுடன் AUAB விவாதிக்க முடியும்.**

மத்திய தொலை தொடர்பு அமைச்சருடன் நடைபெற்ற பேச்சு வார்த்தைக்கு பின் AUAB கூட்டம் நடைபெற்றது. வேலை நிறுத்தத்திற்கு செல்வதா அல்லது தள்ளி வைப்பதா என்பது தான் அப்பொழுது AUAB முன் இருந்த கேள்வி. பரிபூரண விவாதங்களுக்கு பின் குறைந்த பட்சம் 45 நாட்களுக்கு இந்த வேலை நிறுத்தத்தை தள்ளி வைப்பது என AUAB முடிவெடுத்தது. தொலை தொடர்பு துறையுடன் மேலும் சில விவாதங்களை நடத்தி ஒரு சுமூகமான உடன்பாட்டை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கத்துடன் இந்த முடிவு எடுக்கப்பட்டது. மேலும் BSNLக்கு 4G அலைக்கற்றை உடனடியாக ஒதுக்குவதையும், வாங்கும் ஊதியத்தின் அடிப்படையில் ஓய்வூதிய பங்களிப்பு பெறுவதையும் நாம் உறுதி செய்ய வேண்டும். இந்த இரண்டு பிரச்சனைகளில் தீர்வை காணாமல், 3வது ஊதிய மாற்றத்தின் தீர்வு என்பது அர்த்தமற்றது. ஏனெனில், இவை இல்லாமல் மாற்றப்பட்ட ஊதிய விகிதத்தில் ஊதியம் வழங்க BSNLல் பணம் இருக்காது.

மேலே கூறப்பட்ட இந்த சூழலில் தான் 03.12.2018 முதல் நடைபெற இருந்த காலவரையற்ற வேலை நிறுத்தம் ஒத்தி வைக்கப்பட்டது. ஆனால் வேலை நிறுத்தம் விலக்கிக் கொள்ளப்பட வில்லை என்பதை அனைவருக்கும் AUAB தெரிவித்துக் கொள்ள விரும்புகிறது. தொலை தொடர்பு துறை மட்டத்தில் மேலும் சில விவாதங்களை நடத்தி 3வது ஊதிய மாற்றத்தை தீர்வு காணவே AUAB விரும்புகிறது. குறிப்பிட்ட காலத்திற்குள் பிரச்சனைகளை சுமூகமாக தீர்வு காண வேண்டும் என்கிற AUABயின் முயற்சிகள் தோற்கடிக்கப்படும் என்றால், காலவரையற்ற வேலை நிறுத்தத்திற்கு செல்ல AUAB தயங்காது. எனவே நிலைமையை நமது தோழர்கள் அனைவரும் புரிந்துக் கொள்ள வேண்டும். தேவைப்படும் சமயத்தில் போராட ஊழியர்களை எந்நேரத்திலும் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும் என AUABயின் மாநில மாவட்ட தலைவர்களை அகில இந்திய AUAB கேட்டுக்கொள்கிறது.

நன்றி.

**தோழமையுள்ள,**

| -Sd/- | -Sd/- | -Sd/- | -Sd/- |
|---|---|---|---|
| **P.அபிமன்யு** | **C.சந்தேஸ்வர் சிங்** | **K.செபாஸ்டின்** | **பிரகலாத் ராய்** |
| **GS BSNLEU** | **GS NFTE** | **GS SNEA** | **GS AIBSNLEA** |

| -Sd/- | -Sd/- | -Sd/- | -Sd/- | -Sd/- |
|---|---|---|---|---|
| **V.சுப்புராமன்** | **சுரேஷ் குமார்** | **ரவி ஷில் வர்மா** | **ரேவ்தி பிரசாத்** | **M.கபீர்தாஸ்** |
| **GS TEPU** | **GS BSNL MS** | **GS AIGETOA** | **AGS BSNL ATM** | **GS BSNLOA** |